# <u>கீழக்கரை நகராட்சி</u>

கீழக்கரை நகராட்சி அலுவலகத்தில் 2019 ஜனவரி மாதத்திற்கான நகர்மன்ற சாதாரண கூட்டம் 28.02.2018–ந் தேதி மாலை 3.30 மணிக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர், கீழக்கரை நகராட்சி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் :-

**<u>பொருள் : 1</u>**

இந்நகராட்சியில் நாள் ஒன்றுக்கு சுமார் 22 MT திடக்கழிவுகள் தினசரி சேகரிக்கப்பட்டு குப்பைகளை நகராட்சி உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லப்பட்டும் டம்பர்பிளேசர் பின்கள் பழுதடைந்து குப்பைகள் சேகரிக்க பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. இதனால் நகரில் குப்பைகள் சேகரித்து கொண்டு செல்ல முடியாத நிலையில் உள்ளது. இதனால் நகரில் குப்பைகள் தேக்கமடைந்து சுகாதார சீர்கேடு ஏற்படும் நிலை உள்ளது. எனவே பொது சுகாதார அவசர அவசியம் கருதி பழுதடைந்த டம்பர் பிளேசர் பின்களை பழுதுநீக்கம் செய்ய துப்புரவு ஆய்வாளர் (பொ) அவர்களால் கோரப்பட்டுள்ளது. மேலும் பழுது நீக்கம் செய்ய ஒரு பின்னுக்கு ஆகும் தோராய செலவு ரூ.25,000/– வீதம் 20 பின்களுக்கு ரூ.5,00,000/– (ஐந்து இலட்சத்திற்கும்) ஆகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்செலவீனம் நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு நகர்மன்ற அனுமதி வேண்டி மன்றத்தின் முன்வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. பொதுசுகாதார அவசிய அவசரம் கருதி இப்பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவீனங்கள் ரூ.5,00,000–ஐ மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.325</u>** அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 2</u>**

கீழக்கரை நகராட்சி அலுவலக பொதுப்பிரிவு, பொறியியல் பிரிவு, வருவாய் பிரிவு, பொதுசுகாதார பிரிவு மற்றும் நகரமைப்பு பிரிவு பணியாளர்களுக்கான எழுதுப்பொருட்கள், படிவங்கள், பதிவேடுகள் மற்றும் அச்சிடும் வெள்ளை தாள்கள் போன்ற பொருட்கள் வாஙகுவதற்காக இந்நகர் மன்றத்தில் தீர்மானம் எண்.142 நாள். 17.05.2017 மற்றும் தீர்மான எண். 273 நாள். 30.11.2017–ன் படி அனுமதி பெறப்பட்டு செலவீனம் செய்யப்பட்டுள்ளது.

தற்போது இந்நகராட்சி அம்மா உணவகத்தில் தேவையான இட்லி வில்லைகள் இராமநாதபுரம் மாவட்ட அச்சக சேவை தொழிற் கூட்டுறவு சங்கத்திலிருந்து பெறப்பட்டதால் மேற்காணும் நிறுவனத்திற்கு சரக்குகள் மற்றும் சேவை வரிகள் உட்பட ரூ.41,300/– பட்டியல் தொகை வழஙக வேண்டியுள்ளது. மேலும் இனிவரும் காலஙகளில் எழுதுப்பொருட்கள், படிவஙகள், பதிவேடுகள் மற்றும் அச்சிடும் தாள்கள் போன்ற பொருட்கள் வாஙக வேண்டியிருப்பின் அதற்கான கூடுதல் உத்தேச செலவீனத் தொகை ரூ.4,50,000/– ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. உத்தேச செலவீனத் தொகை ரூ.4,50,000/– இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. கூட்டுறவு சஙகம் மூலம் பொருட்கள் வாஙகுவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.326</u>** அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 3</u>**

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை கணினி மூலம் ஆய்வுக்கு இந்நகராட்சியில் ஆணையாளர் அறையில் உள்ள கணினிக்கு Skype வசதி செய்யும் பொருட்டு வெப்கேமரா, ஹொண்ட்செட் மைக், மென்பொருள் இன்ஸ்டாலேசன் போன்றவை பொருத்துமாறு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலக கணினி திட்ட இயக்குநர் அவர்களின் தொலைப்பேசியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக இந்நகராட்சி புள்ளிவிபரக்குறிப்பாளரால்தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்காணும் பணியின் அவசர அவசியம் கருதி பணியை உடனடியாக மேற்கொள்ளவும் இச்செலவீனத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(கோப்பு எண் 165 / 2018/இ1)**

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து பணியை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்
2. இந்நகராட்சியின் நிர்வாக நலனை கருத்தில் கொண்டு உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.327</u>** அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 4</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்ட வார்டு பகுதிகளில் குடிநீர் குழாய்கள் உடைப்பட்டு பொதுமக்களுக்கு பயன் இல்லாமல் வீணாகி செல்கிறது. குடிநீர் குழாய்களில் இருந்து வெளியேறும் தண்ணீர் பல்வேறு இடங்களில் தேஙகுவதால் பொதுமக்களுக்கு நோய்கள் பரவும் நிலை ஏற்படுகிறது. குடிநீர் குழாய் உடைப்புகளை சரிசெய்ய புதிய குடிநீர் குழாய்கள் மாற்றுவதற்கும் இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் இடஙகளில் ஏற்பட்டுள்ள குடிநீர் உடைப்புகளை சரி செய்வதற்கும் இவ்வலுவலக குடிநீர் திட்ட குழாய் பொருத்துனரால் அனுமதி கோரப்பட்டுள்ளது.

1. வார்டு எண் 16 புதுக்குடி தெரு
2. வார்டு எண் 11 சாலைத் தெரு
3. வார்டு எண் 1 மறவர் தெரு
4. வார்டு எண் 20 ஹமீதியா பள்ளி அருகில்
5. வார்டு எண் 3 பெத்திரி தெரு

மேற்படி குடிநீர் குழாய் பழுதுநீக்க பணிகளை அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி பெற்று உடனடியாக மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவீனம் ரூ.30,000/—ஆகும் என இவ்வலுவலக பொதுப்பணி மேற்பார்வையாளரால் தெரிவிக்கப் பட்டுள்ளது. மேற்காணும் செலவீனத்தை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(கோப்பு எண்.159/2018/இ1)**

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1. இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து ரூ 30,000/—யை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

2. குடிநீர் திட்ட அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.328</u>** அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 5</u>**

நகராட்சிக்கு உட்பட்ட 21—வது வார்டு தட்டாந்தோப்பு கழிவுநீர் பம்பிங ஸ்டேசனில் அமைந்துள்ள 10HP மற்றும் 5HP மின் மோட்டாரை இயக்குவதற்கான மின் இணைப்பு வயா் மற்றும் ஸ்டார்டர் பேனல் உயர்மின் அழுத்தம் காரணமாக காயில் பழுதாகி உள்ளது. மேலும் 10HP SP4L கழிவுநீர் பம்பில் பழுது ஏற்பட்டுள்ளதால் கழிவுநீர் வெளியேற்றும் பணியில் தொய்வு ஏற்படுகின்றது. ஆகவே 10HP மின்மோட்டார் பம்ப் மற்றும் ஸ்டார்டர்

பேனல்போர்டுகள் பழுது நீக்கம் செய்வதற்கும் இவ்வலுவலக மின்பணியாளரால் அனுமதி கோரப்பட்டுள்ளது.

மேற்படி, மோட்டர் பழுதுகளை அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி பெற்று உடனடியாக பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவீனம் ரூ.55,000/—ஆகும் என இவ்வலுவலக பொதுப்பணி மேற்பார்வையாளரால் தெரிவிக்கப் பட்டுள்ளது. மேற்காணும் செலவீனத்தை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(கோப்பு எண்.159/2018/இ1)**

<u>அலுவலகக்குறிப்பு</u>

1. இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து ரூ 55,000/—யை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்
2. பொதுசுகாதார நலனை மற்றும் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.329</u>** அனுமதிக்கப்பட்டது.

தனிஅலுவலர் மற்றும்
ஆணையாளர்
கீழக்கரை நகராட்சி